அங்கீகாரம் அளிப்பதிலே சங்கடம் ஏற்படுகிறது. அரசு அனுப்ப வேண்டிய மானியம் தாளாளருக்கு அனுப்பப்படவில்லை. தலைமை ஆசிரியர் மூலமாக, பணம் வழங்கப்பட்டு வருகிறது. அந்தத் தாளாளர் மீது, தமிழ்நாடு கல்வி விதி 99 (எ) ன்படி தக்க நடவடிக்கை எடுக்கத் தேவையான ஆதாரங்களுடன் குற்றச்சாட்டுக் குறிப்பு வரைவு தயாரித்து இயக்குநரின் ஒப்புதலுக்கு அனுப்பும்படி நெல்லை (நடு) மாவட்டக் கல்வி அலுவலர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். ஆனால், அந்தப் பள்ளிக் கூடத்தை இப்பொழுது அரசாங்கம் எடுத்துக் கொள்வதற்குச் சட்டத்திலே இடம் இல்லை. புதிய சட்டத்தின் அடிப்படையிலேதான் நாம் முயற்சியை மேற்கொள்ளவேண்டும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, இந்த மேலப்பாளையம் முஸ்லிம் உயர்நிலைப்பள்ளி, அங்குள்ள சிறுபான்மை மக்களுக்குப் பெரும்பாலும் பயன்படுகிறது. ஆகவே, சிறுபான்மையோரை ஆதரிக்கின்ற வகையில் சில நிபந்தனைகளைத் தளர்த்தி அங்கீகாரம் அளிக்க அரசு இனிமேலாவது முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இவற்றிலே எதுவும் தளர்த்தக்கூடிய நிபந்தனைகள் அல்ல. ரூ. 80,000 கட்ட வேண்டும், அதனைத் தளர்த்தி ரூ. 20,000 கட்டச்சொல்லுங்கள், ஒரே தடவையில் கட்டுவதற்குப் பதிலாக, 5 தடவையாகக் கட்ட அனுமதியுங்கள் என்று சொன்னால், அந்த விதிகளைத் தளர்த்தலாம். ஆனால், இதில் உள்ள விதிகளைத் தளர்த்த முடியாது. ஆகவேதான் நேரடியாக தலைமை ஆசிரியர் மூலமாகச் சம்பளத்தைத் தருகிறோம். சிறுபான்மையோர் பள்ளியாக இருப்பதால், புதிய சட்டத்தின்படி கூட அரசாங்கம் எடுத்துக்கொள்ள வழி இல்லை.

திரு. கே. எ. வகாப்: நிபந்தனைகளைத் தளர்த்த இயலாது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்பள்ளி பொருளாதாரச் சிக்கலிலே சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, அரசாங்கம் தனிக் கருணை வைத்து, பொருளாதார உதவி அளித்து, அப்பள்ளி நிர்வாகம் நல்ல முறையிலே நடப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அரசாங்கம் எடுத்துக் கொள்ள முடியாதே தவிர, அவர்களாகத் தந்து விடுவார்களானால், அரசாங்கம் அதுபற்றி யோசிக்கலாம்.

அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்.

*356 வினா—திரு. த. சோனையா: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம் டி. ஆலங்குளம் அரிசனங்களுக்கு மனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அரிசனங்களுக்கு அங்கு குடியேற தடை எதுவும் ஏற்பட்டுள்ளதா ?

1974 மார்ச் 11]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) எதுமில்லை.

* 357 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகரம், 28-வது வார்டு, காங்கயம்பாளையம்புதூரில் உள்ள அரிசன மக்களுக்கு வீட்டு மனைக்கு நிலம் கையகப்படுத்தும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : பிரிவு 4(1) முன் மொழிவு மாவட்ட ஆட்சியாளரின் பரிசீலனையில் உள்ளது.

[முற்பகல் 9-30]

திரு. எஸ். வடிவேல் : தலைவர் அவர்களே, அரிசனங்களுக்கு வீடுகள் கட்டிக்கொள்வதற்கு மனைகள் கொடுப்பதற்கு இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. இன்று போகிற நிலைமையைப் பார்த்தால் ஆமை வேகத்திலே போய்க் கொண்டிருக்கிறது, அதை முயல் வேகத்திலே போகச் செய்கின்ற நிலைமையில் இல்லாமல் இலாக்கா ரொம்பப் பின்தங்கியிருக்கிறது. ஆகவே அந்த நிலைமையை மாற்றி ஒரு ஆண்டுக் காலத்திற்குள்ளாகவே மனைகளை வழங்கச் செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மனை வழங்குகின்ற பொழுது இடம் அரசாங்கத்தினுடைய நிலமாக இருந்தால் தாமதம் இல்லாமல் வழங்கலாம், ஆனால் தனியார்களுடைய நிலமாக இருந்தால் அவற்றை ஆர்ஜிதம் செய்துதான் கொடுக்க வேண்டியிருக்கிறது, அந்த நிலைமையில் நிலச் சொந்தக்காரர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள், அவர்கள் வழக்கு மன்றங்களுக்குக்கூடச் செல்கிறார்கள், அதனால் தான் தாமதம் ஏற்படுகிறது, அரசாங்க இலாக்காவிலே தாமதம் இல்லை.

திரு. முனு ஆதி : தலைவர் அவர்களே, அரிசன மக்களுக்கு மனைப்பட்டா வழங்குவதிலும் சரி, குடிசைகளிலே வாழ்கின்ற மக்களுக்கு மனைப்பட்டா வழங்குவதிலும் சரி பலவகையான சிக்ககள் இருப்பதால்தான் காலதாமதம் ஏற்படுகிறது என்று இந்த மன்றத்திலேயே பலமுறைகள் எடுத்துக் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த நிலைமையைப் பற்றி ஆராய ஒரு சர்வ கட்சிக் குழு ஏற்படுத்தி அவர்களுக்கு எல்லாம் சீக்கிரமாக மனைப்பட்டாக்கள் வழங்கக்கூடிய முறையைக் கொண்டுவர அரசிற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அரிசனங்களுக்கு நிலம் வழங்கப் படுவதிலே—அவர்கள் குடியிருக்கின்ற பகுதிகளிலே ஜனத் தொகை நாளுக்குநாள் பெருகிக்கொண்டே வந்து இட நெருக்கடி ஏற்பட்டு விடுகிறது—அவர்கள் இருக்கின்ற இடங்களுக்கு அருகாமையிலே நிலத்தைக் கொடுக்க வேண்டும் என்று கேட்கிறார்கள், சில இடங்களைப்